செய்தி வெளியீடு எண்:1046 நாள்:06.11.2021

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை இன்று (6.11.2021) தலைமைச் செயலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே. சுப்பராயன், கொங்கு வேளாளர் அறக்கட்டளை தலைவர் திரு. பெஸ்ட் எஸ். ராமசாமி, செயலாளர் திரு.எஸ். கோவிந்தப்பன், பொருளாளர் திரு.எம்.கந்தசாமி, துணைத் தலைவர்கள் திரு.பி.முருகசாமி, திரு.ஆர்.குப்புசாமி, இணைச் செயலாளர் திரு.என்.துரைசாமி ஆகியோர் சந்தித்து, சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை பெயரில் மகளிர் கல்லூரி அமைத்திட உதவியதற்காக நன்றி தெரிவித்தார்கள்.

திருப்பூர் – அங்கேரிபாளையம் சாலையில், கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் கொங்கு வேளாளர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி கடந்த 30 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளியில் சுமார் 4000 ஏழை எளிய மாணவ, மாணவியர்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளி மாணாக்கர்களின் மேற்படிப்பிற்காக திருப்பூர் மாவட்டம், அவினாசி - வஞ்சிபாளையம் நெடுஞ்சாலையில், கொங்கு வேளாளர் அறக்கட்டளைக்கு சொந்தமான நிலத்தில் தீரன் சின்னமலை கலை அறிவியில் கல்லூரி என்ற பெயரில் புதிய மகளிர் கல்லூரி தொடங்கிட, விவசாய நிலத்தை, கல்விப் பணிக்காக மாற்றித் தரக் கோரி கடந்த நான்கு ஆண்டு காலமாக பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் தீர்வு காணப்படாத நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், ஒரே வாரத்தில் இப்பிரச்சனைக்கு தீர்வு கண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கொங்கு வேளாளர் அறக்கட்டளை நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள்.

............

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9